பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# சுவிஸிலிருந்து 12,000 தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவர்!

(பேர்ண்)

இவ்வருட இறுதிக்குள் சுமார் 12.000 இலங்கை தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப சுவிற்ஸர்லாந்து அரசுதீர்மானித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கு அந்நாட்டு எதிர் கட்சிகளும் பொது அமைப்புகளும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

1991- ஜூலை மாதத்துக்குப் பின்னர் அகதிகளாகச் சென்றவர்களே திருப்பி அனுப்பப்படவுள்ளனர் ஏற்கனவே பலாத்காரமாக சிறிது சிறிதாக தமிழ் அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

தம்மைத் திருப்பி அனுப்புவதற்கு எதிராக சுவிஸிலுள்ள ஈழத்தமிழர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்தி பல மகஜர்களை சமர்ப்பித்துள்

(6ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 14 இதழ் 144
யாழ்ப்பாணம் புதன்கிழமை 28 - 6 - 1995

## 5 போராளிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு காயங்கேணி இராணுவ மினி முகாம் மீதான வெற்றிகர தாக்குதலின் போது விழுப்புண் அடைந்த இரு போராளிகள் நேற்றுக் காலை வீரச்சாவு அடைந்தனர்.

லெப். உலகேந்திரன் (வண்ணமணி சிவநாயகம் மட்டக்களப்பு), வீரவேங்கை வேணுதாசன் (அழகுதுரை நற்குணநந்தன் மட்டக்களப்பு) ஆகிய இரு போராளிகளும் வீரச்சாவு அடைந்தவர்

(6-ம் பக்கம் பார்க்க)

## ★ புலிகளுடன் மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பமானால்

# கடும் நிபந்தனையுடனேயே அரசு பேச்சுவார்த்தையை நடத்தும்!

## ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

(லண்டன்)

"விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தையை நடத்துவதாக இருந்தால் மிக கடுமையான நிபந்தனையின் அடிப்படையிலேயே அது ஆரம்பிக்கப்படும்'' என்று ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்க 'லண்டன் ஒப்சேவர்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:-

''இனப் பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலமான தீர்வையே நாம் எப்பொழுதும் விரும்புகிறோம். இழப்புகள் இன்றி சமாதானத்தை அடைய பேச்சு வார்த்தை ஒன்றே சிறந்தது.

நாட்டிலுள்ள சிறுபான்மை மக்களாகிய தமிழர்களும், முஸ்லிம்களும் பல குறைபாடுகளை எதிர்நோக்குகிறார்கள். இந்த உரிமையை அவர்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

## சிங்கள குடியேற்றங்களில் பாதுகாப்பு அதிகரிப்பு

[கொழும்பு]

மகாவலி 'பி' வலயத்திலுள்ள 15 சிங்களக் குடியேற்றங்களுக்கு வழங்கப்பட்டுவந்த பாதுகாப்புமேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

குடியேற்றங்களை விட்டு சிங்களக் குடியேற்றவாசிகள் வெளியேறுவதை தடுக்கும் நோக்கில அரசு இந்த நடவடிக்கையை மேற்கொள்

(6ம் பக்கம் பாக்க)

## கடமைக்கு திரும்பாத 33 பொலிஸாரை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு

(மட்டக்களப்பு)

33 பொலிஸாரை கண்ட இடத்தில் உடன் கைது செய்யும்படி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

விடுமுறையின் நிமித்தம் தத்தமது வீடுகளுக்குச் சென்ற மேற்படி 33 பொலிஸாரும் இதுவரை எதுவித அறிவித்தல்களுமின்றி மட்டுநகர் பொலிஸ் நிலையத்துக்கு கடமைக்குத் திரும்பாததினாலேயே, நீதிமன்றம் மேற்படி உத்தரவை பிறப்பித்துள்ளது.

கடமைக்குத் திரும்பாத 33 பொலிஸாரில், ஒரு இன்ஸ்பெக்டரும் அடங்குவார் என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் கிழக்கில் அதிகரித்ததை அடுத்து இவர்கள் கடமைக்கு திரும்ப அச்சம் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வி- ரி

## சந்திரிகா அரசின் வாக்குறுதிகள் யாவும் முறிந்து போய்விட்டன

(கொழும்பு)

யூலை 15 க்கு குறுகிய நாட்களே உள்ள நிலையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசும் மக்களுக்கும் நாடாளுமன்றத்திற்கும் வழங்கியிருந்த வாக்குறுதிகள் முறிந்து போய்விட்டது'' என்று 'சண்டே ரைம்ஸ்'' ஆசிரிய தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது: சந்திரிகா அரசு கடந்த ஆகஸ்டில் நடந்த பொது தேர்தலிலும் பின்னர் நடந்த ஜனாதிபதி தேர்தலிலும் மூன்று பிரதான

(5ம் பக்கம் பார்க்க)

## ராணுவத்துக்கு பொருள்கள் ஏற்ற கப்பல் உரிமையாளர்கள் மறுப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினுல் வடக்குக்கு பொருட்களை அனுப்புவதற்கு வாடகைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் கப்பல் சொந்தக்காரர்கள், வடக்கிலுள்ள இராணுவ முகாம்களுக்கு அவசியமான உணவுவகைகள், குடிவகைகள், ஆயுதங்கள் ஆகிய பொருட்களை ஏற்றிச்செல்ல மறுத்துவிட்டார்கள் என்று 'ராவய' பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதனுல் பாதுகாப்பு அமைச்சு பெரும் நெருக்கடிக்குள் உள்ளாகி வருகின்றது என்று 'ராவய' மேலும் தெரிவித்துள்ளது. ம-கி

## கட்டுமுறிவு ராணுவமுகாமிலிருந்து படையினர் சிறிது சிறிதாக வாபஸ்

(யாழ்ப்பாணம்)

கட்டுமுறிவு இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் சிறிது சிறிதாக அப்புறப்படுத்தப்படுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்முகாமிலுள்ள இராணுவத்தினர் ஏனைய முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். கட்டுமுறிவு ராணுவ முகாம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாவதால் இம்முடிவு எடுக்கப் பட்டிருக்கலாம் என தெரிய வருகிறது.

கிழக்கு மாகாணத்தில் புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி பல ராணுவ முகாம்களும் பொலிஸ் நிலையங்

(6 ம் பக்கம் பார்க்க)

## மண்டை தீவிலிருந்து ஷெல் தாக்குதல்!

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு இராணுவ முகாம் பகுதியிலிருந்து யாழ் நகர் பகுதியை நோக்கி இன்று அதிகாலை கடும் ஷெல் தாக்குதலும் துப்பாக்கி வேட்டுக்களும் நடத்தப்பட்டன.

இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலை அடுத்து கரையோரப் பகுதி மக்கள் இரவிரவாக தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

அதிகாலை 2.15 மணியளவில் பெரும் சத்தத்துடன் குண்டு ஒன்று வெடித்ததைத் தொடர்ந்து பராவெளிச்சம் பாய்ச்சபட்டு துப்பாக்கி வேட்

(6ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட படையினர் பின்னடிப்பு!

[மட்டக்களப்பு]

கிழக்கு மாகாணத்திலுள்ள இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு பின்னடித்து வருவதாக தெரியவருகிறது.

விடுதலைப்புலிகளின் அதிகரித்த தாக்குதல்களை அடுத்தே ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட படையினர் அச்சம் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

படையினர் ரோந்து செல்லும் நேரங்களில் எல்லாம் விடுதலைப்புலிகள் எங்கோ ஒரு இடத்தில் வைத்து ரோந்துப் படையணி மீது தாக்குதல் நடத்துகின்றனர்

இதனுல்ரோந்துபணிகளில் ஈடுபடுவதற்கு இராணுவத்

(6ம் பக்க தொடர்சி)

## வரி விளம்பரம்

### விற்பனையாகிறது

நயினை நாகபூசணி அம்மனின் உற்சவத்தை முன்னிட்டு. நயினை நாகபூசணி படம் பிறேம் போட்டு விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது. விலை ரூபா 140/-. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (எ 5039)

### சேவை

போட்டோ ஸ்ரட் - 5/- (காகிதாதிகள் தனி) பெருப்பித்தும் (205%) சிறுப்பித்தும் (48%) கொடுக்கப்படும். 100 ரோணியோ 19/- இரு பக்கம் 29/- ஸ்ரென்சில்-10/- ரைப்பிங் தமிழ் - 7/- ஆங்கிலம் - 8/50. யாழ் மருந்தகம், 470 (250) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ 5036)

### புலமைப் பரிசில்

ஆண்டு - 5 புலமைப் பரிசில் தேர்வுக்கான வினைப் பத்திரம் 1, வினப் பத்திரம் 2 க்குரிய ''பொது விவேகம், பொதறிவு'' வெளிவந்துவிட்டது. வெளியீடு: சுப்பிரமணிய புத்தகசாலை - யாழ்ப்பாணம், (ஏ-5027)

### விசேஷ அன்ரனு

ரூபவாஹினி மட்ருஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு விசேஷ T. V. அன்ரனு பொருத்துதல், பழுதுபார்த்தல், T.V. செட், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக்கொள்வதற்கு வீனஸ் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ். 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி எ-5002)

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரைப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, குலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1489)

## நேர்முகபரீட்சை நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திற்கு புதிய பாதுகாப்பு ஊழியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை ஒன்று கடந்த சனிக்கிழமை யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. 170-கி

## காரைநகரிலிருந்து பீரங்கிதாக்கு

(யாழ்ப்பாணம்)
காரைநகர் சவுக்கடி கடற்பிராந்தியத்தில் இருந்து நேற்று முன்தினம் அதிகாலை 4 30 மணிக்கு கடற்படையினர் பொன்னாலைக் கரையோரப்பகுதிகளை நோக்சி கடுமையான பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டனர்.

இச்சம்பவத்தினுல் அப்பகுதி மக்கள் இரவு விடியும்வரை பெரும் பதற்றத்துடன் காணப்பட்டனர். 90-கி

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## செயலக மின் விநியோகம் விரைவில் பாதிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)
யாழ். செயலக மின்சார விநியோகம் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

செயலக ஜெனரேற்றரை இயக்குவதற்கான டீசல் கையிருப்பில் இருந்து முடியும் தறுவாயிலுள்ளது.

இவ் டீசல் குறைந்தது ஒரு வார காலத்துக்குப் போதுமான கையிருப்பே இருப்பதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 170

## பள்ளிவாசல் 'கூரை இடிந்து 15 குழந்தைகள் பலி

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானில் தெற்கு பஞ்சாபில் முஸ்லிம் பள்ளிவாசல் கூரை இடிந்து வீழ்ந்ததில் 15 குழந்தைகள் பரிதாபகரமாக மாண்டு போனுர்கள். 35 பேர் படுகாயமடைந்தனர்.

காற்றுடன் கூடிய கடும் மழையையடுத்தே இப் பள்ளிவாசல் இடிந்து விழுந்ததாகவும் இச்சம்பவத்தின்போது 75 குழந்தைகள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் காப்பாற்றப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. க-சி

## ஜெயின் கமிஷன் முன் ஆஜராக அதிகாரிகளுக்கு பணிப்பு

(சென்னை)
திரு. ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரித்துவரும் ஜெயின் கமிஷன், மத்திய புலனுய்வுக் கழகம் மற்றும் இதர ஏஜென்சிகளின் தலைவர்களை அடுத்த மாதம் தம்முன் ஆஜராகும்படி பணித்துள்ளது.

இந்த அதிகாரிகள் நேரடியாக வராமல் விலக்கு அளிக்கப்பட வேண்டுமென்ற மத்திய அரசின் கோரிக்கையை கமிஷன் நிராகரித்துள்ளது.

எனினும் மத்திய அரசு வழக்கறிஞர்களின் விவாதத்தைக் கேட்ட பின்னர் சிறப்பு விசாரணைக் குழுவின் தலைவர் ஆர். டி. கார்த்திகேயனுக்கு குறுக்கு விசாரணையிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதாகவும் கமிஷன் அறிவித்திருககிறது. கே-சி

## யாழ். அஞ்சலக ஊழியர்க்கு 5 வருடமாக சீருடை இல்லை

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் உள்ள தபாலகங்களில் பணிபுரியும் சிற்றாழியர்களுக்கான சீருடைத் துணிகள் கடந்த ஐந்து வருடங்களாக வழங்கப்படவில்லை என்று தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தபாலக சிற்றாழியர்களுக்கு சீருடைத் துணிகளை கொழும்பில் இருந்து தருவித்து வழங்குவதற்கு தபாலகமெடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை என்று அவ்வதிகாரி தெரிவித்தார்

கடந்த மூன்று மாதத்திற்கு முன்னர் வடமாகாண அஞ்சல் திணைக்களம் தபால் தொலை தொடர்பு அமைச்சுடன் பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து சிற்றாழியர்களுக்கான சீருடைகளை வட பகுதிக்கு அனுப்பிவைப்பதாக உறுதியளித்தும் சம்பந்தப்பட்ட அமைச்சு சீருடைத் துணிகளை கப்பல்மூலம் இதுவரை அனுப்பி வைக்கவில்லை, 170 கி

## குடல் நோயினுல் 18,000 குழந்தைகள் பாதிப்பு

(கல்கத்தா)
இந்தியாவின் மேற்குவங்க மாநிலத்தில் இரப்பை மற்றும் குடல் சம்பந்தமான நோயினுல் கடந்த இரு மாதங்களில் 18,000 குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக பி. ரி. ஐ. செய்தி தெரிவித்துள்ளது,

கல்கத்தா அரச வைத்திய சாலையில் இந்நோயின் காரணமாக 111 குழந்தைகள் இறந்துள்ளதும் நாள்தோறும் இந்நோய்களின் தாக்கத்திற்கு பல குழந்தைகள் உள்ளானதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதிக வெப்பம், சுகாதாரக் கொடுமைகள் மற்றும் எரிபொருட் கழிவுகளால் இந்நோய்கள் உண்டாவதாகவும் வைத்தியர்கள் கூறியுள்ளனர். சி

## சென். ஜோன்ஸ் கல்லூரி உதவியுடன் மின்வெளிச்சம்

(யாழ்ப்பாணம்)
சென் ஜோன்ஸ் கல்லூரி ஜெனறேற்ரர் மூலம் கல்லூரியை அண்டியுள்ள பிரதான வீதிப்பகுதிசகு இரவு நேர மின் விநியோகம் வழங்கப்பட்டுவருவதாக யாழ் மாநகராட்சி மன்ற மின் பொறியியலாளர் தெரிவித்தார்.

யாழ்.மாநகராட்சி மன்றத்தால் இப்பிரதான வீதியில் இருளால் சூழப்பட்டிருந்த மூன்று இடங்களில் பொருத்தப்பட்ட மின் குமிழிகள் மூலமே மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. -162-கி

## இரவுநேர போதனைக்கு மின் வெளிச்ச வசதி

(யாழ்ப்பாணம்)
கொழும்புத்துறைப் பகுதி மாணவர்களின் இரவு நேரக் கல்விப் போதனையை நடத்துவதற்கு வசதியாக ஜெனறேற்ரர் மூலம் வெளிச்ச வசதியை கொழும்புத்துறை சனசமூக நிலையம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் நடைபெற்றுவரும் இவ் இரவு நேரக்கல்விப் போதனையில் இருநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகிறுர்கள் இப்பகுதியிலுள்ள வீதியொன்றுக்கும் இவர்களால் மின் வெளிச்ச வசதி வழங்கப்பட்டுள்ளது. 162-கி

## யாழ். பல்கலைக்கழக பொருட்கள் கொழும்பில் தேக்கம்

(யாழ்ப்பாணம்)
யாழ். பல்கலைக் கழகத்துக்கு தேவையான பொருள்களைக் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்து வருவதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு அனுமதி வழங்க பின்னடித்து வருவதாக தெரியவருகின்றது.

யாழ். பல்கலைக் கழகத்துக்கு கொள்முதல் செய்யப்பட்ட பொருட்கள் கொழும்பில் தேங்கிக் கிடக்கின்றன.

இரசாயனப் பொருள்கள், கம்பியூட்டர் தட்டச்சுப் பொறி மற்றும் சில இயந்திர சாதனங்கள் போன்றவை கொழும்பில் உள்ளன.

இவற்றை கப்பல் மூலம் யாழ். பல்கலைக் கழகத்திற்கு எடுத்து வருவதற்கு அனுமதி வழங்க பாதுகாப்பு அமைச்சு பின்னடித்து வருகின்றது -170-கி

## யாழ். மாவட்ட தபாலகங்களில் 65 வெற்றிடங்களுக்கு 1,400 விண்ணப்பங்கள்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் உள்ள தபாலகங்களில் நிலவும் சமாயசமய சிற்றாழியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு வடமாகாண அஞ்சல் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

தற்போது தபாலகங்களில் 65 வெற்றிடங்கள் உள்ளன.

இவ். வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுந்தவர்களிடமிருந்து தபால் திணைக்களம் விண்ணப்பங்களை கோரியுள்ளது

இப்பதவிக்கு 1400 விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்திருப்பதாக வடமாகாண அஞ்சல் நாயகம் தெரிவித்தார்.

இவர்களுக்கான நேர்முகப் பரிட்சை யூலை மாத நடுப்பகுதியில் நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். 170-கி

## நான்கு ராணுவ முகாம்கள் கிழக்கில் மூடப்பட்டன

(மட்டக்களப்பு)
கிழக்கு மாகாண எல்லையோரப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம்கள் பலவற்றை இராணுவம் படிப்படியாக மூடிவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்தவாரம் மட்டும் நாலு முகாம்களை இராணுவம் மூடிவிட்டது.

தன்மானம் வெளி, தரவைக் குளம், கூளாவடி, நாப்பத்தாவில் ஆகிய நாலு முகாம்களையும் இராணுவம் அகற்றிவிட்டது.

இதேநேரம் மட்டக்களப்பு பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களை விடுதலைப் புலிகளின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றுவதற்காக இராணுவம் இரவு பகலாக முகாம்களை அண்டிய பகுதிகளைச் சுற்றி பலத்த எறிகணைத் தாக்குதல்களை நடாத்தி வருவதனுல் இப்பகுதிகளிலுள்ள பொதுமக்கள் அங்கிருந்து வெளியேறி வருவதாகவும் கூறப்படுகின்றது. வி கி

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-06-28**

புதன் இரவு

8-02 குயிலோசை நிகழ்ச்சியில் தமிழ்க்கவி எழுதிய ''நேற்றிலிருந்து இன்றுவரை'' கிராமிய நிகழ்வு
8-20 வாத்திய கானங்கள்
8-30 செய்திகள்
8-40 நாடகம் ரவி எழுதிய ''வினையும் விளைவும்''

**1995 - 06 - 29**

வியாழன் காலை

7-02 மாவீர வணக்கம்
7-15 விடுதலை கீதங்கள்
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
8-00 விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானெலி நிகழ்ச்சி நிரல்

**1995-06-28**

புதன் மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சி கீதம்
5-10 புதியவை
5-15 படப்பாடல்கள்
5-30 அறிவூற்று
6-00 சிந்தனைக்குச் சில வினடிகள்
6-02 உங்கள் தெரிவு
6-15 விளையாட்டுச் செய்திகள் விளையாட்டுச் செய்திகளைத் தொடர்ந்து மீண்டும் உங்கள் தெரிவு
6-30 நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

## இன்று

(யாழ்ப்பாணம்)
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நினைவுக் காப்பு நிதியம் யாழ். பல்கலைக்கழக இந்து மன்ற அனுசரணையுடன் நடாத்தும் பண்டிதமணி நினைவுப் பேருரை இன்று 28ம் திகதி புதன்கிழமை பி.ப 3 மணிக்கு யாழ், பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நடைபெறும்.

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன் சைவசமய மரபில் ஆகமங்கள் என்ற பொருள்பற்றி நிறைவுப் பேருரை நிகழ்த்துவார்.

0 0

(கொழும்புத்துறை)
இணுவில் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் ''திருக்கல்யாணம்'' இன்று 28ம் திகதி புதன்கிழமை மாலை 4மணிக்கு வசந்த மண்டபப் பூஜையை அடுத்து நடைபெறும். 154

0 0

[வடமராட்சி]
பொலிகண்டி கந்தவனம் ஸ்ரீசுப்பிரமணிய தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று 28 ம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். மேற்படி மகோற்சவம் அடுத்தமாதம் 18ம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியுடன் நிறைவு பெறுகின்றது. -51

0 0

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்ட பாடசாலைகளுக் கிடையிலான தமிழ்மொழி, கலைத்திறன் போட்டிகள் பரிசளிப்பு விழா யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இன்று 28ம் திகதி புதன் பிற்பகல் 2.00 மணிக்கு தலைவர் திரு. நா. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும். முதன்மை விருந்தினராக அரசியற்றுறை பெறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் கல்ந்துகொலவார்,

[5ம் பக்கம் பார்க்க]

நல்லூர் ...



### மணிவாக்கு

பொய்தான் எல்லா எதிரிகளையும்விட பெரியது. அதிலும் பெரிய எதிரியானது எது தெரியுமா? தவறான அபிப்பிராயங்கள்தான்.

— நீட்ஸே

## நமது நோக்கு

### இந்திய உதவி

இந்தியா சிறிலங்கா அரசுக்கு இராணுவ உதவி செய்யவில்லை என்று கூறுகிறது. லக்ஷ்மன் கதிர்காமரும் இராணுவ உதவி பற்றி இந்தியாவிடம் கோரிக்கை விடப்படவில்லை என்று கூறுகிறார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இருப்பிடத்தைக் கண்டறிவதற்கு செயற்கைக்கோள் புலனாய்வு முறையிலான உபகரணங்களைப்பாவித்து அறியப்போவதாக சிறிலங்கா அரசு தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

செயற்கைக்கோள் புலனாய்வு முறைக்கான உபகரணங்களைத தயாரிக்கும் நாடு இஸ்ரேலாகும். அதனிடமிருந்து அவற்றைச் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவற்றிற்கான இயக்குனர்களையும் இஸ்ரேலிடமிருந்து தருவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ் இயக்குனர்கள் செயற்கைக்கோள் மூலம் பெறப்படும் புலனாய்வுத் தகவல்களைப் பகுப்பாய்வு செய்வார்கள் ஆகவே இஸ்ரேலிடமிருந்து இராணுவத் தளபாடங்களும் இராணுவ நிபுணர்களின்சேவையும் பெறப்படுகிறது.

செயற்கைக்கோள் புலனாய்வு உபகரணங்கள் மிகவும் விலை கூடியவை. சிறிலங்காவிற்கு அவற்றை வாங்கும் பணவலுஇல்லை. ஆகவே இவ்உபகரணங்கள் இந்தியாவின் மூலம் கொள்வனவு செய்யப்படவுள்ளன அப்போது குறைந்த விலையில் இஸ்ரேல் அவற்றைக் கொடுக்கும் எனவே இந்தியா சிறிலங்காவுக்கு இராணுவ ரீதியாக உதவிசெய்கிறது.

இந்தியாவின்மிகநெருங்கிய நண்பனான இஸ்ரேல் தன்னுடைய நண்பன் இந்தியாவுக்கு உதவும்முகமாக சிறிலங்காவிற்கு இராணுவ தொழில்நுட்ப உதவியைக்கொடுத்து தலைவர் பிரபாகரன் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கப்போகிறதாம். இதிலிருந்து இந்தியா தலைவர் பிரபாகரனை தனது நாட்டுக்கு நாடு கடத்தும்படி விடுத்த கோரிக்கையை நிறைவேற்றப்பார்க்கிறது. அது நிறைவேறும் என்றும் கனவுகாண்கிறது. முன்னொரு சமயம் இஸ்ரேல் சிறிலங்காஇராணுவ நிபுணர்களுக்கு தூசுஉறிஞ்சும் உபகரணத்தை நவீன இராணுவ உபகரணம் என்று ஏமாற்றி விற்கப் பார்த்தது போல் இந்த விடயத்தில் நடந்துகொள்ளாமல் இருந்தாலே போதும்.

அவசர அவசரமாக புதிய ஆயுதங்களை கொள்வனவு செய்து போரை அரசு ஒரு வருடத்துக்குள் முடிக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால் அவசரம் அவசரமாக வாங்கும் ஆயுதங்கள்தான் தேவைக்குப் பொருத்தமற்றவையாகவும் ஏற்கனவே படையினரின் கைவசமுள்ளவையாகவும் காணப்படுவதாக முறைப்பாடுகள் வருகின்றன. அதிகாரிகள் இடைத்தரகர்களாக கமிஷன் பெறுவதினாலேயே இப்பின்னடைவுகள் ஏற்படுகின்றன. ஆகவே போரின் நிலையை புதிய ஆயுதங்கள் மாற்றலாம் என்பது பொய்த்துப் போக இடமுண்டு.

# எல்லாளன் படை அச்சுறுத்தலால் வெளிநாட்டு முதலீடுகள் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு தங்கள் பிரஜைகள் செல்வதை பல நாடுகளும் மீள்பரிசீலனை செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் தூதரகங்களை கொண்டுள்ள மேற்கத்திய; ஆசிய நாடுகளின் தூதரகங்கள் தம்தம் நாடுகளுக்கு இது தொடர்பாக அறிவித்துள்ளன. எல்லாளன் படையின் அச்சுறுத்தலையடுத்தே இந்தஅறிவிப்புகள் செய்யப்பட்டுள்ளன.

தத்தமது நாடுகளிலுள்ள வெளிநாட்டு முகவர்களை இவ்விடயம் குறித்து அறிவுறுத்துமாறும் இந்த தூதரகங்கள் அறிவித்துள்ளன.

வெளிநாடுகளின் இந்த நிலைப்பாடானது இலங்கையில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகையில் மிகப்பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்துவதுடன் வெளிநாட்டு முதலீட்டையும் பெரிதும் பாதிக்குமென அரசு வட்டாரங்கள் ஆழ்ந்த கவலையடைந்துள்ளனவாம். சி

# தெற்கிற்கு சமுர்த்தி திட்டம்; வடக்கு-கிழக்கிற்கு உணவு முத்திரை

(யாழ்ப்பாணம்)

தெற்கில் சமுர்த்தி திட்டம் அமுலாக்கப்படும் அதேவேளை வடக்கு-கிழக்கில் உணவு முத்திரை திட்டமே தொடர்ந்தும் நடைமுறையில் இருந்து வருகின்றது.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்ததையடுத்து நாடு பூராவும் உணவு முத்திரை திட்டத்தை நிறுத்தி சமுர்த்தி திட்டத்தை அமுலுக்கு கொண்டு வந்தது.

ஆனால் இத்திட்டம் தெற்கில் மட்டுமே அமுல் படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ் ஐந்நூறு ரூபா வருமானமுள்ள குடும்பத்தினருக்கு ஆயிரம் ரூபாவும், ஆயிரம் ரூபா வருமானமுள்ள குடும்பத்தினருக்கு ஐந்நூறு ரூபாவும் வழங்கப்பட்டு வருகின்றது.

வடக்கு-கிழக்கு மக்களுக்கு இத்திட்டம் இன்னமும் அமுல் படுத்தப்படவில்லை. அவர்களுக்கு உணவு முத்திரைகளே வழங்கப்பட்டு வருகின்றன.

170-கி

# கராச்சி வன்செயல்களில் 90க்கும் அதிகமானோர் பலி

(கராச்சி)

பாகிஸ்தானின் வர்த்தக தலைநகரான கராச்சியில் தொடர்ந்துஇடம்பெறும் வன்முறைச் சம்பவங்களை அடுத்து அந்த நாட்டிற்கு வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கும் வாய்ப்புக்களில் பெருத்த பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் நிதிநிறுவனங்களின் அலுவலகங்களும் ஊழியர்களும தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகி வருகிறார்கள்.

இதனால் கராச்சியின் மொத்த வர்த்தக நடவடிக்கைகளும் ஸ்தம்பித்து போயுள்ளது. அரசியல் கட்சிகளின் வேலை நிறுத்தங்களிலும் வன்முறைவெறியாட்டங்களினாலும் தொழிற்சாலைகள் மூடிக்கிடக்கின்றன.

சமீபத்திய வன்முறையினால் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கியும் பல வெளிநாட்டு கம்பனிகளும் தங்கள் அலுவலகங்களை மூடிவிட்டதோடு பணியாளர்களையும் ஹோட்டல்களில் தங்க வைத்துள்ளன.

கராச்சி துறைமுகமும் பங்குச் சந்தையும் கடந்த வெள்ளிக்கிழமை முதல் இயங்கவில்லை பல அமெரிக்க, ஐரோப்பிய நிறுவனங்கள் தங்கள் விரிவாக்க மற்றும் முதலீட்டு திட்டங்களை கைவிட்டு நகரைவிட்டுவிட்டு வெளியேற திட்டமிட்டுவருவதாக கராச்சியிலுள்ள அமெரிக்கவர்த்தக சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்

தினம் தினம் நடக்கும் வன்முறைச் சம்பவங்களுக்கு இதுவரை கராச்சி நகரில 90 பேர் வரை பலியாகியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வே-கி

# பெண் புலிகளின் வளர்ச்சியால் படையினர் மத்தியில் அச்சம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் பெண் புலிகளுக்கு படையினர்பெரும் அச்சமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் தற்போது பெண் கடற்கரும் புலி புலிகள் அணியொன்றை உருவாக்கி அதற்கு பல்வேறுவிதமான பயிற்சிகளையும் வழங்கி வருவதால் இப்படையணியின் தாக்குதலையும் எதிர்கொள்ளவேண்டிய சூழ்நிலை தோன்றியுள்ளதாம்.

94ம் ஆண்டு செப்ரெம்பர் 19ம் திகதி மன்னார் கடற்பகுதியில் 'சாகரவர்த்தன' கப்பலை நளாயினி என்றபெண் கரும்புலி தலைமையில் சென்றபுலிகளின் அணியே தகர்த்துள்ளது. இதன்பின்பு பல கடற்கரும் புலித் தாக்குதலில் பெண்கள் படையணி பங்குபற்றி வருகிறது.

தற்போது பெண் புலிகளுக்கான பயிற்சிகள் நவீனமானதும் தீவிரமானதுமாக அமைந்துள்ளது. இவர்களுக்கு முதலுதவி பற்றியும் அவசர நிலைமையில் எப்படி மருத்துவ சிகிச்சை அளிப்பது என்பது பற்றிய அறிவும் புகட்டப்பட்டு வருகிறது.

இதன்மூலம் விடுதலைப் புலிகளின் பெண்கள் படையணி எதிர்காலத்தில் படையினருக்கு மேலும் பெரும் தலையிடியைக் கொடுப்பார்கள் எனக் கருதப்படுவதாகவும் ராணுவ புலனாய்வுப் பிரிவினர் கூறுகின்றனர். (சி)

## பண்டிதமணியின் சிந்தனைகள் மிகவும் உயர்ந்தவை

(யாழ்ப்பாணம்)

''பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் சிந்தனைகள் மிகவும் உயர்ந்தவை அவரது பிறந்ததின விழாக்கள் அவர் சிந்தனைகளை விளக்கஞ் செய்வனவாக அமையவேண்டும்''.

இவ்வாறு பண்டிதமணியின் 96-வது பிறந்ததின விழா பற்றிப் பண்டிதமணி நூல்வெளியீட்டுச்சபை கூட்டிய ஆலோசனைக் கூட்டத்தில் சபையின் தலைவர் பண்டிதை பொன். பாக்கியம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சபையின் காரியதரிசி ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் பேசுகையில், 'நாடறிந்த பெரும் புலவரான பண்டிதர் ஐயாவிடம் கற்கும் வாய்ப்பைப் பெற்ற நாம் பெரும் பாக்கியசாலிகள். அவரது நோக்கங்களை மாணவர்களாகிய நாம் நிறைவு செய்வது கடமையாகும்' என்றார். திருமதி பராசக்தி சந்திரகேசரி, திருவாளர்கள் சு. கனகசபாபதி, செ. சோதிப்பெருமாள். அ. நாகரத்தினம் ஆகியோரும் உரையாற்றினர்.

அடுத்துவரும் ஜூலை மூற்பகுதியில் பண்டிதமணியின் 96வது பிறந்த தினத்தைத் திருநெல்வேலியில் கொண்டாடுவது என்றும் தீர்மானிக்கப் பட்டது. -சி

## சத்துணவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஆத்திசூடி வீதிப் பகுதியைச் சேர்ந்தசுமார் 65ஐந்துவயதுக் குட்பட்ட சிறார்களுக்கு சத்துணவுத்திட்ட நடவடிக்கையின் கீழ் சத்துணவு வழங்கப் பட்டது. 90-ரி

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

(வடமராட்சி)

ஆவரங்கால் நடராச இராமலிங்க தேவஸ்தான புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று 28ம் திகதி புதன் கிழமை காலை 8-30 மணிக்கு ஆலய வீதியில் இடம்பெறும். -51

## இரசாயனப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள புடவைக் கைத்தொழில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இரசாயனப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றதால் அவற்றின் உற்பத்திகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

துணிகளுக்கு சாயமூட்டுவதற்கும் ஏனைய நிறத் துணிகளுக்கு வர்ணமிடுவதற்கும் தேவையான இரசாயனப் பொருட்கள் பற்றாக் குறையாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (72)

## இராசி பலன்

28-06-1995

புதன்கிழமை

[தமிழுக்கு ஆனி 14]

அமாவாசை காலை 6-34 வரை. திருவாதிரை மு. இ 10-31 வரை, இராகுகாலம் காலை 11-55 முதல் 1-25 வரை. சுபவேளை மாலை 4-25 முதல் 5-55 வரை.

மேஷம்: தொழிலுறவு, கலையுணர்வு, தாயன்பு.

இடபம்; குடும்ப கவலை, குறைகேட்டல், மனவிரக்தி.

மிதுனம்: தொழில் லாபம். முயற்சி பலிதம், பணவரவு.

கடகம்: கண்டிப்பு, நண்பர் கவலை, அலைச்சல்.

சிங்கம்: தெய்வ சிந்தனை முதியோர் ஆசி, வாக்கு வசீகரம்.

கன்னி: அன்னியர் உதவி, கடமையுணர்வு. பாராட்டு.

துலாம்: சபலமடைதல், பெற்றோர் கவலை, வீண்பேச்சு.

விருச்சிகம்: குற்ற உணர்வு, கருத்து முரண்பாடு, தாழ்வு நிலை.

தனுசு; பணியாள் சகாயம், உறவினர் வருகை, கலகலப்பு.

மகரம்; புதியஉறவு, பயண ஏற்பாடு, பொதுப்பணி செலவு.

கும்பம்: குழப்ப மடைதல்; சகோதரபகை, மனசங்கடம்.

மீனம்! விரோதிகள் பயம். தொழில்கஷ்டம், உடல் உபாதை.

— ஜோஸ்யர்

## பலதும் பத்தும்

### புருப் பால்!

பறவையிடமிருந்து பாலா? அவசரப்படாது சங்கதியைப் படியுங்கள்...! பெண் புறா இடும் முட்டைகளைப் பகலில் ஆண் புறாவும், இரவில் பெண்புறாவும் மாறி மாறி அடைகாக்கும்.

16 நாட்களிற் குஞ்சு வந்ததும் அதற்குப் புறாப்பால் ஊட்டப்படும். ஆண் புறாவும், பெண்புறாவும் பாலூட்டுமாம்...! அந்தப்பால் எங்கிருந்துவருகிறது? கழுத்துப் பகுதியிலுள்ள அரைப்புப் பையிலிருந்து சுரக்கும் பால் போன்ற பதார்த்தத்தையே ஊட்டுகின்றன.

இத் திரவம்... பாலூட்டிகளின் பாலை ஒத்திருப்பதால் இது... புறுப்பால் (Pigeon's Milk) எனப்படுகிறது...!

— மயூரன்

# 'பிரபாவை' நாடு கடத்தக் கோருவது காங்கிரசின் அரசியல் தந்திரமே

(சென்னை)

சோனியா காந்தியை முன்னுக்கு வைத்து தம்மை கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கிவிட முனையும் அதிருப்தியாளருக்கு பதிலடி தருவதற்காகவே பிரதமர் நரசிம்மராவ் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை ராஜீவ் கொலை வழக்கிற்காக நாடு கடத்து மாறுகோருகிறார் என 'இந்தியா ருடே' தெரிவித்துள்ளது.

அச் சஞ்சிகை மேலும் தெரிவிக்கையில்: இலங்கை ஜனாதிபதி சந்திரிகா மோதல் தவிர்ப்பு உடன்பாடு முறிந்த கோபத்தில் புலிகளின் மீது ஆத்திரமடைந்திருப்பதால் இந்தியாவுக்கும் புலிகளுக்குமிடையே இன்னும் அதிக இடைவெளியை ஏற்படுத்த இந்த வேண்டுகோளை பயன்படுத்தக் கூடும்.

1992லேயே இந்திய அரசு இவ்வாறானதொரு வேண்டுகோளை அனுப்ப நோட்டம் பார்த்து, கடைசியில் ராஜதந்திர நிலவரம் சரியில்லாததால் அதைக் கைவிட்டது'

திரு. பிரபாகரனை 1982ல் தமிழகப் பொலிஸார் கைது செய்தபோது அவரை ஒப்படைக்குமாறு இலங்கை அரசு கோரியது. இதனை இந்திய அரசு மறுத்துவிட்டது.

'இந்தியாவின் கோரிக்கையால் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே சமாதானப் பேச்சுக்கு வழியே இல்லாதபடி கதவுகள் மூடப்பட்டுவிடும்' என தமிழ் கட்சித் தலைவர் ஒருவர் கூறியுள்ளார். ஆனால் பேச்சுகளுக்குவருமாறு நிர்ப்பந்திப்பதற்காகஇலங்கை அரசு இதைப் பயன்படுத்தக்கூடும்.

ஆனால் ஒப்படைப்பு கோரிக்கையை செயல்படுத்த விடுதலைப் புலிகளின் தலைவர்களை முதலில் கைதுசெய்ய வேண்டும். அதுசாத்தியம் என்று யாரும் நினைக்கவில்லை. முன்னாள் வெளியுறவுச் செயலர் திரு ஜே என். டிக்ஷித் சுட்டிக்காட்டுவதுபோல''இரண்டு இராணுவங்களின் பலத்தையும் தாங்கிநின்ற ஒரு வெற்றிகரமான கெரில்லாதலைவர் பிரபாகரன்''.

இந்த ஒரு காரணத்துக்காகவே இந்தியாவின் முகத்தில் கரிபூசப்படலாம் மூன்று தலைவர்களையும் பிடிக்க முடியவில்லை என்று இலங்கை அரசு கூறினால் இந்தியாவுக்கு இரு வழிகள்தான் உண்டு. ஒன்று தானே நேரடியாகப் போய்ப் பிடிப்பது. ஆனால் இது எளிதல்ல; இன்னொன்று ஒப்படைப்புக் கோரிக்கை இலங்கை அரசின் தஸ்தாவேஜுகளில் தூசிபடிந்து கொண்டிருக்க, தன் செயலின் உண்மையான நோக்கத்தை- தன்னை தக்க வைத்துக்கொள்ள ஒரு ஆளும் கட்சி செய்யும் அரசியல் தந்திரத்தை உலகறியச் செய்வது எனவும் குறிப்பிட்டுள்ளது.

(சி)

## உதவிப்பண கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு, வேலணை, நயினாதீவுப் பகுதிகளைச் சேர்ந்த பொதுசன உதவிப்பணம் பெறுபவர்களுக்கான சித்திரை மாத கொடுப்பனவு யாழ் மத்திய தபாலகத்தில் இயங்கும் வேலணை. புங்குடுதீவு தபாலகங்களில் வழங்கப்படுகின்றது.

கெற்பலி அகதிமுகாமில் வசிக்கும் மக்களுக்கு விடத்தல்பளை உபதபாலகத்தில் கொடுப்பனவு வழங்கப்படும்.

அத்துடன்புற்றுநோய் தொழுநோயாளர்களுக்கான சித்திரை மாத கொடுப்பனவு புங்குடுதீவு, வேலணை, விடத்தல்பளை தபாலகங்களில் வழங்கப்படுகிறதென வேலணை பிரதேச செயலர் அறிவித்துள்ளார்

-கி

# வடபகுதிக்கு உரம் எடுத்துவர அரசு முற்றுகத் தடை

(கொழும்பு)

வடபகுதிக்கு உரவகைகள் எடுத்துச் செல்வதை முற்றாக தடை செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தி ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

தற்பொழுது யூரியா உரத்தினை மட்டுமே வடபகுதிக்கு எடுத்து வருவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏனைய ரக உரவகைகளை எடுத்துவர கட்டுப்பாடு கிடையாது.

ஆனால் தற்பொழுது அரசு எடுத்துள்ள புதிய முடிவின்படி சகலரக உரத்தையும் வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

-கி

## தகராறை தீர்க்க முயன்றவர் கத்திவெட்டுக்கு இலக்கானர்

(யாழ்ப்பாணம்)

கணவன் மனைவிக்கிடையில் இடம்பெற்ற தகராறு ஒன்றை விலக்கி வைக்கச் சென்றவர் கழுத்தில் கத்தி வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

குருநகர் இராசசிங்கம் வீதி பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அந்தோனி தியோனிஸ் [45-வயது[ என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

-90-கி

## சுயவிபர திரட்டு இல்லாமையால் கூட்டுறவு ஊழியர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் அதிஉயர் முதுநிலைத் தரங்களை சார்ந்த பணியாளர்களின் சுய விபரம் திரட்டுக்கள் எதுவும் இல்லை என்று வட-கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா தெரிவித்துள்ளார்.

பணியாளர்களின் இந்த சுயவிபரக் கோவைகள் வடக்கு-கிழக்கு மாகாண சபையில் இல்லாமையினால் வெளிநாடுகளில் கிடைத்துள்ள துறை சார்ந்த புலமைப் பரிசில்களுக்கு அவர்களை, சிபார்சு செய்ய முடியாமலுள்ளது என்றும் சுந்தரம் டிவகலாலா தெரிவித்துள்ளார் (170-சி)

# ஆயுத, ஆட்பல உதவியை வழங்க இஸ்ரேல் தயாராயுள்ளதாம்

(கொழும்பு)

ஆயுத உதவியையும், ஆட்கள் உதவியையும் இலங்கைக்கு வழங்க இஸ்ரேல் தயாராயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசு கோரும் பட்சத்தில் போதிய இராணுவ தளபாடங்களையும், இராணுவ உதவியையும் இஸ்ரேல் வழங்குமென அந்த நாடு இலங்கைக்கு உறுதியளித்துள்ளது.

எனினும் இலங்கை அரசு சில சிக்கல்கள் காரணமாக இஸ்ரேலின் உதவியை இதுவரை நாடவில்லையாம். இது குறித்து வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை. எனினும் அமைச்சர் அஷ்ரப் கடும் எதிர்ப்புத் தெரிவிததுள்ளார்,

இதற்கிடையில் இரு இஸ்ரேல் வர்த்தகர்களை சந்திப்பதற்கான அழைப்பை அமைச்சர் டி. எம், ஜெயரத்ன விடுத்திருந்தார். அதற்கிணங்க இஸ்ரேலில் இருந்து அந்த இரு வர்த்தகர்கள் வந்த போதும் அவர்களை அமைச்சர் ஜெயரத்ன சந்திக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

சி

## பாவனைக்குதவாத பொருட்கள் விற்பனை கண்டுபிடிப்பு

(கொழும்பு)

பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவது தற்பொழுது வெகுவாக அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கவர்ச்சிகரமான முறையில் பொதிகளில் அடைக்கப்பட்ட நிலையில் இப்பொருட்கள் விற்பனைக்கு வருவதால் பொதுமக்கள் இப்பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக இயற்றப்பட்ட சட்டங்கள் வெறும் ஆவணவடிவிலேயே உள்ளதாகவும் உருப்படியான நடவடிக்கைகள் எடுப்பதாக தெரியவில்லையென்றும் பொதுமக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதிகாரிகளும் இவ்விடயத்தில் அசமந்தப் போக்கையே தொடர்ந்து கடைப்பிடித்து வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கொழும்பு நகருக்கு வெளியே இத்தகைய தடை செய்யப்பட்ட பொருட்கள் விற்கப்படுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

-க

### மகாவலி 'பி' பிரதேசத்தில்

# காணமல்போகும் தமிழ் இளைஞர் பற்றி பொலிஸார் தீவிர விசாரணை

(கொழும்பு)

மகாவலி 'பி' வலயப் பகுதியிலிருந்து காணமல் போகும் தமிழ் இளைஞர்கள் பற்றி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப் பகுதி இளைஞர்கள் விடுதலைப் புலிகளுடன் சேரலாம் என்ற அச்சத்தினாலேயே பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்களாம்: இப்பிரதேசத்திலிருந்து செல்லும் தமிழ் இளைஞர்கள் புலிகளுக்கு மகாவலி 'பி' பிரதேச அமைப்பை பற்றிய தகவல்களை வழங்குவதால் இப்பகுதிகளில் புலிகளின் திடீர் தாக்குதல்கள் நடக்கலாமென படையினர் அஞ்சுகின்றனராம்.

இதேவேளை பொலநறுவை பகுதியிலிருந்து ஊர்காவல் படைக்கு புதிதாக ஆட்களை சேர்க்கும் விடயத்தில் படையினர் எச்சரிக்கையாக உள்ளனர். இதில் புலிகளின் ஊடுருவல்கள் இடம்பெறலாமென அவர்கள் கருதுகிறார்கள்.

அண்மைக்காலமாக எல்லைப்புற கிராமங்களில் எழுந்துள்ள அச்சநிலை காரணமாக கிராம வாசிகள் பெருமளவில் தமது இடங்களைவிட்டு வெளியேறி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

-சி

## செய்தித் தணிக்கையை அரசு நிறுத்த வேண்டும்

(கொழும்பு)

செய்திப் பத்திரிகை வெளியீட்டாளர்களின் சர்வதேச சமஷ்டி அமைப்பு இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் இலங்கையில்பத்திரிகைச் சுதந்திரம் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருப்பது குறித்து ஆழ்ந்த வருத்தம் தெரிவித்திருக்கின்றது.

நூறு நாடுகளிலிருந்துவெளியாகும் 15,000 வெளியீடுகளை பிரதிநிதித்துவம் செய்கின்ற இவ்வமைப்பின் தலைவர் கே. பிரெஸ்கொட்லோ தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

இலங்கை நிலவரம் மிகச் சிக்கலானது என்பதை நாமறிவோம். ஆயினும் இதற்கு தீர்வு காணும் வழிகள் யாவருக்கும் திறந்திருக்க வேண்டும். சகல மக்கள் தரப்பிலுமான ஆலோசனைகளுக்கும் இடமளிக்கப்படவேண்டும். இலங்கைப் பிரஜைகளின் பங்களிப்பின்றி இனப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியாது.

இந்நாட்டில் காணப்படும் பத்திரிகைத் தணிக்கையை நிச்சயமாக எதிர்க்கிறேன். அத்துடன் இங்குள்ள பத்திரிகைகள்மீது எவ்வகையிலும் தணிக்கை பிரயோகிக்கப்படவில்லை என்பதை உறுதி செய்வதற்கான அனைத்தையும் மேற்கொள்ளுமாறு உங்களைக் கோருகிறேன்;

பூரணமானதும் கட்டுப்பாடற்றதுமான பத்திரிகைச் சுதந்திரம் நாட்டின் தூண் போன்றதும் ஜனநாயகத்துக்கு இன்றியமையாததுமென தேர்தல்காலத்தில் வாக்குறுதி கொடுத்தீர்கள். அதைவிடுத்து இந்த அடிப்படை உரிமைமீது கட்டுப்பாடுகளை விதித்தால் அது சர்வதேச ரீதியில் உங்கள் நாட்டின் கௌரவத்துக்கு இழுக்காக அமையுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்,

தீ-சி

# விமானப் படைக்கு ரஷ்யாவின் 'பறக்கும் டாங்கி' ஹெலிகள்!

(கொழும்பு)

விமானப் படையினர், தாக்குதல் ஹெலிகொப்டர்களை விரைவில் கொள்வனவு செய்யவுள்ளனர்.

இது தொடர்பாக தற்போது பேச்சுக்கள் நடைபெற்று வருகிறது. கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்பு உயர்மட்டக் கூட்டத்தில் இது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

எம். ஐ. எல் -17ரக 'பறக்கும் டாங்கி' எனப்படும் தாக்குதல் ஹெலிகொப்டர்களை வாங்குவதற்கு இந்தக் கூட்டத்தில் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்தியப் படைகள் நிலைகொண்டிருந்த காலத்தில் இந்தியப் படையினர் புலிகளுக்கு எதிரான போரில் இந்தவகை ஹெலிகொப்டரையே பயன்படுத்தியதாகவும் இது ரஷ்ய தயாரிப்பு தாக்குதல் விமானம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் ஹெலிகொப்டர்கள் புலிகளின் ஏவுகணைத் தாக்குதல்களையும் சமாளிக்கக் கூடியவை எனவும், எனினும் புலிகள் வசமருக்கும் ஏவுகணைகள் அடையாளம் காணப்படாத நிலையில் இது பற்றி உறுதியாகக் கூறமுடியாதெனவும் இராணுவ ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

சி- கி

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்.

பிறப்பு பதிவு விண்ணப்பத்தை

# சிங்களத்தில் மட்டும் நிரப்புமாறு படிவங்களில் அறிவுறுத்தல்

(கொழும்புத்துறை)

கொழும்பு மாளிகாவத்தை பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர் காரியாலயத்தில வழங்கப்படும் பிறப்புப் பதிவிற்குரிய விண்ணப்பப் படிவம் தனிச் சிங்களத்தில் மட்டுமே நிரப்பப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

இந்தப் பிறப்பு விண்ணப்பப் படிவத்தின் மேல் பகுதியிலேயே ''இப்பத்திரத்தைச் சிங்களத்தில் மட்டுமே நிரப்புங்கள்'' எனச் சிங்களத்தில் மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இப்பிறப்புப் படிவத்தை சிங்களம் தெரியாத பலர் ஆங்கிலத்தில் நிரப்பிக் கொடுத்து விட்டார்கள்

தற்போது என்ன செய்வது என்று தெரியாமல் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல தமிழர் தமது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு விடுமோ என்று கவலை கொண்டுள்ளனர்.

இப்படிவம் சிங்களத்தில் மட்டும் நிரப்பவேண்டும் என்று தெரிந்துகொண்ட ஏனையோர் படிவத்தை நிரப்ப சிங்கள மொழி தெரிந்தவர்களை நாடியுள்ளனர்

படிவத்தை ஆங்கிலத்தில் நிரப்பக் கொடுத்தவர்களுக்கு இரண்டு மாதங்கள் கடந்தும் பிறப்புப் பதிவு இன்று வரை கிடைக்கவில்லை என தெரிவித்துள்ளனர்.

சிங்களம் அரசமொழி படிவத்தை சிங்களத்தில் நிரப்பித் தருமாறு இவ்வலுவலக ஊழியர் தன்னை வற்புறுத்தியதாக கொழும்பிலிருந்து வந்த ஒருவர் கூறினார்.

எந்த அலுவலகங்களுக்குச் சென்றாலும் தனிச் சிங்களப் படிவங்களைக் கட்டாயப்படுத்திச் சிங்களத்தில் அச்சடித்து விற்கப்படுகிறது. [154 சி]

## ராணுவத்தில் முஸ்லிம் படை பிரிவை அமைக்க கோரிக்கை

[கொழும்பு]

இராணுவத்தில் முஸ்லிம் படைப்பிரிவொன்றை ஏற்படுத்துமாறு மீண்டும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இத்தகைய முஸ்லிம் இராணுவ படைப் பிரிவொன்று அவசியமென முஸ்லிம் அமைப்புக்களும், பிரமுகர்களும் ஜனாதிபதியைக் கோரியுள்ளதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

சில வருடங்களுக்கு முன்னரும் இத்தகைய கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததும் பின்னர் அது படைத் தலைமையினால் நிராகரிக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. கி

## படையினரின் தேவைகளை பூர்த்தி செய்ய அரசு முடிவு

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இராணுவத்தினரின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்ய அரசு முடிவு செய்துள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

யுத்தமுனையில் படையினரின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்வதன்மூலமே விடுதலைப்புலிகளை தோற்கடிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுவதால் அவர்களின் சகலதேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு அரசு முனைவந்துள்ளது.

மேலும் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் தொடர்பு சாதனங்களின் முழு ஆதரவையும் பெறும் முயற்சிகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. யுத்தம் பற்றிய உண்மைச் செய்திகளை மக்களுக்கு வழங்கவும் மக்களுக்கு உண்மை நிலைகளை தெரிவிக்கவும் அரசு உத்தேசித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்மூலம் அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிரான பெரும் போர் ஒன்றை துரிதமாக நடாத்த முனைவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. சி கி

## வடிகால்களில் கழிவுகளை போடுவோர் மீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள திறந்த வடிகால் அமைப்புக்குள்வீட்டு வியாபர நிலைய, கைத்தொழில் கழிவுப் பொருட்களைப் போடுவதினால் தொற்று நோய்ப்பெருக்கமும். துப்பரவு செய்வதில் இடைஞ்சலும், ஏற்படுவதாக யாழ். மாநகர சபைப்பகுதியினர் தமிழீழ சுகாதாரசேவைகளின் பொறுப்பாளர் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

வாய்க்கால்களில் கழிவுப் பொருட்களை போடுவதினால் நீர் தேக்கம் ஏற்படுவதும், இது நுளம்பு விருத்திக்கும், ஈக்கள் பெருக்கத்திற்கும் உகந்த இடமாக அமைகிறது, எனவே தொற்று நோய்களைக் கட்டுபடுத்தவும் துர்நாற்றத்தை இல்லாதொழிக்கவும் இவ்வாறான செயலைச்செய்ய வேண்டாமெனவும், இதனை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், தமிழீழ சுகாதார சேவை பொறுப்பாளர் அறிவித்துள்ளார். -கி

## தொழில் வங்கி பதிவு வேலைகள் மீண்டும் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

கடந்த மே மாதம் 10ம் திகதி முதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த தொழில் வங்கியிற் தொழில் அற்றோரைப் பதிவு செய்யும் வேலைகள் மீண்டும் எதிர்வரும் 1ம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

விண்ணப்பம் சமர்ப்பித்தோரில் இதுவரை பதிவு அட்டையைப்பெற்றுச்கொள்ளாதோர் 15-07-95க்கு முன்னர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகமைச் சான்றிதழ்கள், பாடசாலையை விட்டு விலகியதற்கான சான்றிதழ்கள், அனுபவச் சான்றிதழ்கள், அடையாள அட்டை, குடும்ப அட்டை போன்ற ஆவணங்களைக் காண்பித்துப் பதிவு அட்டையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

புதிதாக விண்ணப்பப்படிவம் பெறுவோர் 15-07-95க்குப் பின்னர் ஞாயிறு, புதன், சனி ஆகிய கிழமைகள் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9-00 மணிக்கும் நண்பகல் 12-30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் ரூபா 10/- சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். கி

## செப்ரிசிமியா இருவர் மரணம்

[யாழ்ப்பாணம்]

செப்ரிசிமியா நோயினால் பீடிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டவர்களில் நேற்று முன்தினம் இருவர் மரணமடைந்தனர்.

பருத்தித்துறை, புலோலி தெற்கைச் சேர்ந்த கமலா தேவி சுப்பிரமணியம் [வயது 35) அளவெட்டி கிழக்கு கும்பலையைச் சேர்ந்த திருஞானரத்தினம் அனஜெகன் [வயது 17[ ஆகிய இருவருமே மரணமானவர்களாவர். 90

## இன்று

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

(கொழும்புத்துறை)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவ கால ஏற்பாடுகள் குறித்து யாழ். மாநகராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் இன்று 28-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு ஓர் கலந்துரையாடல் இடம் பெறும். (154)

0 0 0

(யாழ்ப்பாணம்]

யாழ் சந்தர்மடம் அரசடி வீதி அருள்மிகு செல்வநாக பூஷணி அம்பாள் திருக்கோயில் ஆனி மாத அலங்காரத் திருவிழா இன்று 28 ம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி 15 நாட்கள் நடைபெறவுள்ளது.

## இளம்பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சைக்கிள் மாட்டுவண்டி விபத்தில் வண்டிச் சில்லு ஏறியதால் இளம்பெண் படுகாயமடைந்தார்

கிளிநொச்சியைச் சேர்ந்த சுந்தரராசன் சந்திரகலா (15 வயது) என்ற இளம் பெண்ணே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து யாழ். போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். 90-சி

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவின் ஆதரவில் இன்று நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டிகளின் விபரங்கள் வருமாறு:

வலி - கிழக்கு உதைபந்தாட்டக் கழகங்களிடையே பாஷையூர் சென். அன்ரனிஸ் கழக மைதானத்தில் இன்று நடைபெறும் முதல் ஆட்டத்தில் நீர்வேலி வளர்மதி கழகமும் சென். ரேகிஸ் கழகமும் மோதும் 2-வது ஆட்டத்தில் அண்ணஸ்ரார் கழகத்தை எதிர்த்து ஸ்ரீவாகீஸ்வரி கழகம் மோதும்.

வடமராட்சியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இன்று நடைபெறும் முதல் ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய கழகமும் உடுப்பிட்டி ஐக்கிய கழகமும் போதும்.

தென்மராட்சியில் சாவகச்சேரி நகரசபை பொது மைதானத்தில் இன்று நடைபெறும் முதல் ஆட்டத்தில் ஒலிம்பிக் கழகமும் தேவகி கழகமும் மோதும். 2-வது ஆட்டத்தில் ரேகா கழகத்தை எதிர்த்து வளர்மதி கழகம் மோதும். வி

0 0

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை யங்ரேயல் விளையாட்டு கழகம் உரும்பராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 2-ம் சுற்றின் இன்றைய ஆட்டங்கள் வருமாறு:

பாசையூர் சென், அன்ரனிஸ் எதிர் யங்ஹென்றீஸ், நாவாந்துறை சென். மேரிஸ் எதிர் பொற்பதி மோதுகின்றன. சி-ரி

## சந்திரிகா

(1-ம பக்கத் தொடர்ச்சி)

குறிக்கோள்களை நிறைவேற்ற வேண்டும் என்ற நிலையில் அமோக வெற்றியீட்டியது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்தல், போரை முடிவுக்கு கொண்டுவரல், பொதுச்சொத்தை விரையமாக்குதலை, தடுத்தல் ஆகிய முக்கிய குறிக்கோள்களே அவையாகும். இந்த குறிக்கோள்களில் எந்த முன்னேற்றமும் காணப்படவிலலை

கூடுதலான அதிகாரம் கூடுதலான ஊழலைக் கொண்டு வரும் என்ற தத்துவத்தையே இது நினைவுபடுத்துகிறது.

யூலை 15க்கு முன் அதிகார பரவலாக்கல் சட்ட மூலம் தயாராக இல்லாததால் ஜனாதிபதி முறமையை ஒழிப்பதையும் அத்தேதிக்கு முன்செய்ய இல்லாதிருப்பதாக அரசு காரணம் கூறுகிறது. 25வருடகால அரசியலில ஏமாற்றமும் சட்ட ஏமாற்றமும் செய்ததிலும் பார்க்க இந்த காரணம் பெரும் அபத்தமானது.

1972ம் ஆண்டில் ஐக்கிய முன்னணி அரசு மக்கள் ஆணையின்றி 2வருடம் ஆட்சி நீடிப்பு செய்யமுயன்றது, அதனை எதிர்த்து ஜே. ஆர். ஜயவர்தன சத்தியாக்கிரகம் செய்தார். இநத எதிர்ப்புகளும் சேர்ந்து அந்த அரசு 1977ல் பதவி இழந்தது. ஆனால் அதே ஜே. ஆர் புதிய குறுக்கு வழி மூலம் நாடாளுமன்றத்தை 6வருடம் நீடித்தார் சர்வசன வாக்கெடுப்பு சட்டப்படி சரியானாலும் நேர்மையானதல்ல

அதேபோலவே அதிகார பரவலாக்கலையும் சர்வ அதிகார ஜனதிபதி முறைஒழிப்பையுய இந்த அரசு இணைந்து காரணம் கூறுகிறது.

வாக்குறுதி வாக்குறுதியாக அமையணும் இல்லையேல் யூலை 15க்கு முன் ஜனாதிபதி முறையை ஒழியாவிடில் பொய் கூறுமல் இந்த அரசும் முன்னையவர்கள் போல்தான் என்று வெளிப்படையாககூறி மக்கள் ஆணைக்கு மதிப்பளிக்க வேண்டும் அரசியல் விளையாட்டை உடன் நிறுத்த வேண்டும். கே .ரி

## 'மே' மாத ஒளிவீச்சு சிறப்பு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நிதர்சனம நிறுவனத்தின் மாதாந்த வீடியோ சஞ்சிகையான 'ஒளிவீச்சு' இரண்டு ஆண்டுகளை நிறைவுசெய்து கொண்டு மூன்றும் ஆண்டில் காலடிவைக்கும் மே மாத சிறப்பு ஒளிநாடா வெளிவந்து விட்டது.

இதில் தொழிலாளர் தினமான மே நாள் தமிழீழம் எங்கும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டமை, காட்டுப்புளியங்குள சிறிலங்கா பொலிஸ் இராணுவமுகாம் மீதான தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிவேக அதிரடித் தக்குதல், 'முற்றுகையிட்டவர்கள் முற்றுகையிடப்பட்டு விட்டார்கள்' எனும் அரசியல் நோக்கு, இம்மாத சமகாலப் பார்வை, ''தமிழீழத்தில் வளர்ந்து வரும் திரைப்படக் கலை'' இயக்குனர் பொ. தாசன் அவர்களுடன் ஒரு நேர்காணல், குறும்படம் ''எதிர்காலம் கனவல்ல'' கலை நிகழ்ச்சிகள் என பல சிறப்பம்சங்களைத் தாங்கி இம்மாத 'சிறப்பு வெளியீடு' வெளிவந்துள்ளது.

இவ்ஒலிநாடா இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு சிறீதர் திரையரங்கில் இலவச காட்சியாக காண்பிக்கப் படும். சி

செஞ்சிலுவைச் சங்கத்தின்

## நடமாடும் சேவைக்கு இனிமேல் கூட்டுப் படைத் தலைமையக அனுமதி தேவை

(கொழும்பு)

இராணுவக் கட்டுபாட்டில் இல்லாத பிரதேசங்களில் செஞ்சிலுவைச் சங்கத்தின் நடமாடும் சேவைகளை நடாத்துவற்கு இனிமேல் முப்படைக்கூட்டுத் தலைமைச்செயலகத்தின் அனுமதிபெறவேண்டும் என அறிவிக்கப்பட்டிருப்பதாக கொழும்புத் தினசரி ஒன்று தெரிவிக்கிறது.

இதுவரை காலமும் சங்கத்தின் நடமாடும் சேவைகளாக உணவு, மருந்துவகைகளை வாகனங்கள் மூலம் வடக்கு நோக்கி கொண்டுவர வவுனியா இராணுவ அதிகாரியின் அனுமதிபோதுமானதாக இருந்தது. ஏனைய கூட்டுறவு பொதுச்சேவைகள் கூட இவ்வாறே இயங்கி வந்தன.

இனி இவையாவும் முப்படைக்கூட்டுத் தலைமைச்செயலகம் அனுமதி கொடுத்த பின்னரே தாண்டிக்குளம் கடந்து வடக்கு நோக்கி பொருட்களை கொண்டு வர முடியும், இதனால் பெருந்தாமதம் ஏற்படலாமென செஞ்சிலுவைச்சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பகுதிகளுக்கு அத்தியாவசிய உணவுப்பொருட்களை ஏற்றிவந்த லொறிகள் பல ஈரப்பெரியகுளத்திலேயே தரித்து நிற்கின்றன: தீ-சி

# தென்பகுதி வீதியோரங்களில் மார்மச் சடலங்கள் அதிகரிப்பு

## 50 நாட்களில் 25 சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

தென்பகுதியில் வீதியோர மார்மச்சடலங்களின் தொகை கடந்த சில தினங்களாக மீண்டும் அதிகரிப்பதாக 'லங்கா தீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

பொலிஸ் தலைமையக அறிக்கை ஒன்றின்படி கடந்த 50 தினங்களில் மட்டும் 25 மார்மச்சடலங்கள் காணப்பட்டுள்ளன.

இவற்றில் அனேகமானவை வீதியோரங்களிலும் ஏனையவை ஆறுகளிலும் ஏனைய மறைவிடங்களிலும் இருந்து கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய சடலங்களில் பல அடையாளம் காணப்பட முடியாதவாறு சிதைவடைந்துள்ளன.

சிலசடலங்களில் சித்திரவதை செய்யப்பட்டமைக்கான அறிகுறிகள் காணப்பட்டன

இச்சடலங்கள் தொடர்பாக பெரும்பாலும் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் அதற்குரிய துப்புக்கள் கிடைப்பதில்லையெனவும் 'லங்காதீப' தெரிவிக்கிறது.

நேற்று முன்தினம் மட்டும் தெற்கில் தொடங்கல, வத்தளை, ஹெந்தல ஆகிய பகுதிகளில் இருந்து மூன்று மார்மச்சடலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.

1987 -1990ம் ஆண்டு காலப் பகுதிக்கு பின்னர் தற்போது மார்மச்சடலங்கள் தெற்கில் மீண்டும் அதிகரிக்கின்றன.

கி-ரி

# வடகிழக்கு 'யுத்தத்துக்கு உதவுமாறு அரச ஊழியர்களுக்கு வேண்டுகோள்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் இடம் பெறும் யுத்தத்துக்கு உதவுமாறு அரச ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இவ்வேளையில், அரச ஊழியர்களோ தொழிலாளர்களோ வேலை நிறுத்தங்களில் ஈடுபடாமல் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி இதுபற்றிமேலும் தெரிவிக்கையில், தொழில் நிறுவனங்களிலும், அரச நிறுவனங்களிலும் கடமையாற்றும் அனைத்து ஊழியர்களும் நாட்டின் இக்கட்டான இக்கால கட்டத்தை கருத்தில் கொண்டு வேலை நிறுத்தம் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடாமல் அமைதியை கருத்தில் கொண்டு அரசுக்கு பக்கபலமாக இருக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

வி ரி

# யாழ். மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசு பின்னடிப்பு

(யாழ்ப்பாணம்)

கடல்வலய தடைச்சட்டத்தினால் யாழ். மாவட்டத்தில் உள்ள கரையோர பகுதி மீனவர்களுக்கான இலவச உலர் உணவு வழங்குவதற்கான திட்டத்தை அரசாங்கம் பின்னடித்து வருகின்றது.

தற்போது அமுலில் இருக்கும் கடல்வலய தடைச்சட்டத்தினால் மீனவர்கள் மீன்பிடி தொழிலின்றி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட இலவச மீனவ நிவாரணத்தை மீண்டும் வழங்குமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அரசாங்கத்தை கேட்டும் அரசாங்கம் மௌனம் சாதித்து வருகின்றது

இதேவேளை யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் 3,363 மீனவ குடும்பங்கள் இலவச மீனவ நிவாரணத்துக்கு விண்ணப்பித்துள்ளனர்.

கடல்வலய சட்டத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மீனவர்கள் 'வருமானம் எதுவுமின்றி பெரும் கஸ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர், இதேவேளை திருமலை மற்றும் கரையோரங்களில் வாழும் சிங்கள மீனவர்களுக்கு அரசு பல உதவிகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

170-ரி

### கட்டுமுறிவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களும் மூடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கட்டுமுறிவு இராணுவ முகாமும் புலிகளால் தாக்கி அழிக்கப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே அங்கிருந்து இராணுவத்தினர் சிறிது சிறிதாக வாபஸ் பெற்று வருகின்றனராம்.

- ரி

அளவெட்டிப் பகுதியில்

# இரு சீவல் தொழிலாளிகள் ராணுவத்திடம் பிடிபட்டனர்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை சீவல் தொழிலுக்காகச் சென்ற இரு சீவல் தொழிலாளிகள் இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டனர்.

அளவெட்டி அணிஞ்சில் பிள்ளையார் கோவிலடிப்பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அளவெட்டி மணற்புலம் இடம்பெயர்ந்தோர் முகாமில் வசிக்கும் சிவராசா சிந்தேஸ்வரன் (24 வயது) உரும்பிராய் கிருஷ்ணன் கோவில் பகுதியில் வசிக்கும் கதிரன் தர்மலிங்கம் (44 வயது) ஆகிய இருவருமே இராணுவத்தினரிடம் பிடிபட்டவர்களாவார்.

90-ரி

### மண்டைதீவிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுக்கள் சரமாரியாகத தீர்க்கப்பட்டன.

விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையே இப்பகுதியில் கடும் மோதல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை பலாலி முகாமிலிருந்து அட்லறி ஷெல் தாக்குதல் யாழ். நகரை நோக்கி நடாத்தப்பட்டது. இத்தாக்குதலினால் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

பலமணிநேரம் இம்மோதல் நீடித்து இருபகுதியிலிருந்தும் மாறி மாறி துப்பாக்கிவேட்டுக்கள் தீர்க்கப்பட்ட வண்ணமிருந்தன. இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரம் பற்றி உடன் அறிய முடியவில்லை.

ரி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.

அதிகார பரவலாக்கலும்

# ஜனாதிபதி முறை ஒழிப்பும் ஏக காலத்தில் வேண்டு

(கொழும்பு)

தற்போதைய நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் நடவடிக்கையும், இனப் பிரச்சினையை தீர்த்து வைக்கு முகமாக அதிகாரத்தை பரவலாக்குதலும் ஏக காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் என நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் இரண்டு பிரதான தமிழ் அரசியல் கட்சிகள் தெரிவித்துள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி - புளொட் ஆகியவையே இந்த இரு கட்சிகளுமாகும்.

யூலை 15க்கு முன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது கஷ்டமான விடயமாகும் இதற்கு கால அவகாசம் வேண்டும். எனவே அரசுக்கு கால அவகாசம் வழங்குவது அவசியம்.

எனினும் இந்த உறுதிமொழியை எப்படியும் அரசு நிறைவேற்றியே தீரவேண்டுமெனவும் அவ்விரு கட்சிகளும் தெரிவித்துள்ளன

கி- கே- ரி

### புலிகளுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதை இந்த அரசுதான் முதன் முதலாக ஏற்றுக்கொண்டுள்ளது.

ஏற்கனவே பதவிக்கு வந்த எந்த ஆளும் கட்சியும் நேர்மையாக இப் பிரச்சினைக்கு தீர்வுகாண முயலவில்லை. அந்த அரசுகள் சிறுபான்மையினரின் பிரச்சினைகளை இழுத்தடித்தன இதனால் சிறுபான்மையினரும் பெரும்பான்மையினரும் இழுபறி நிலைக்கு தள்ளப்பட்டனர். இந்த நிலைமையைத்தான் மாற்ற நாம் முயல்கிறோம்.

பேச்சு வார்த்தை மூலமான தீர்வு சிரமமானதும் சிக்கலானதுமாக இருக்கின்ற போதிலும் அதனை சாதித்துவிட முடியும் என நாம் நம்புகிறோம். ஆனால் புலிகள் இராணுவத்தினரை கொலை செய்வதிலும், அரசுக்கு பாரிய இழப்புகள் ஏற்படுத்துவதிலும் ஈடுபட்டுவருவதால் இராணுவ நடவடிக்கைகளை எடுப்பதைத் தவிர தற்போது எமக்கு வேறு வழி இல்லை.

1983 ம் ஆண்டு இனக்கலவரத்தின் போது பெரும் தொகையான மக்கள் பெற்றோல் ஊற்றி கொழுத்தப்பட்டார்கள் வீடுகள் எரிக்கப்பட்டன. அலுவலகங்கள், கடைகள் எரிக்கப்பட்டன. இத்தகைய செயல்களால் இரு இனங்களுக்குமிடையே உறவு சீர்குலைந்து நம்பிக்கை அற்றுப்போய்விட்டது. இவற்றை தீர்க்கவே பேச்சுவார்த்தைக்கு நாம் சென்றோம்.

அண்மையில் எதிர்கட்சியினர் கலங்கிய குட்டையில் மீன் பிடிப்பது போல் தென்இலங்கையில் கலவரத்தை ஏற்படுத்த முயற்சி செய்தனர். ஆனால் பகிரங்கமாக அவர்கள் அரசுக்கு உதவுவதாக கூறுகிறார்கள். விசாரணை அறிக்கைகளின்படி காலியில் சில கடைகள் தீவைத்து கொளுத்திய சம்பவத்திற்கு எதிர்க்கட்சியினரே பொறுப்பு என தெரியவந்துள்ளது.

பிரதான எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளரும் அந்தத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரின் நெருங்கிய சகாகவும் இந்த தீவைப்பு சம்பவத்திற்கு பொறுப்பாக இருந்துள்ளனர்.

அதே தினத்தில்எதிர்க் கட்சியினர் தயாரித்து கொழும்பு நகரில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதே ஐ. தே கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் இந்த சுவரொட்டிகளின் செலவை பொறுப்பேற்றுள்ளார் தீவைப்புக்கு பொறுப்பான அதே கட்சியை சேர்ந்தவர் கைதாகியுமுள்ளார்.

சமாதானத்திற்கான எமது போராட்டம் எப்படியும் வெற்றியடையும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கே-ரி

### சுவிஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளமை தெரிந்ததே.

சுவிஸிலுள்ள இலங்கை அகதிகளின் நிலவரம் தொடர்பாக கண்டறிவதற்கு சுவிஸ் அரசின் விசேட குழுவொன்று அண்மையில் இலங்கை சென்று திரும்பியதும் குறிப்பிடத்தக்கது.

ரி

### சிங்கள

(1ம் பக்கத்தொடர்ச்சி)

கின்றது.

கிழக்கிலுள்ள ராணுவ முகாம்கள்- பொலிஸ் நிலையங்கள் புலிகளின் தொடர்ச்சியான தாக்குதலுக்கு உள்ளானதை அடுத்து சிங்களக் குடியேற்றவாசிகளும் தவது இருப்பிடங்களைவிட்டு இடம் பெயர்ந்து வருவதனை அடுத்தே பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

- ரி

# ஜனாதிபதியின் புதிய மனித உரிமைக்குழு தெரிவு முயற்சிக்கு பலத்த 'எதிர்ப்பு

(கொழும்பு)

''மனித உரிமை மீறல்களை கண்காணிப்பதற்காக புதிய குழு ஒன்று நிறுவப்படுமென்று ஜனாதிபதி திருமதி சந்திரிகா தெரிவித்திருப்பதற்கு பலத்தஎதிர்ப்பு கிளம்பியுள்ளது.

மனித உரிமை மீறல்களை தற்போது கண்காணிக்கும் குழுவின் தலைவர் திரு.சாம் விஜயசிங்கா இதுபற்றி தெரிவிக்கையில்

இராணுவம் தற்போது விடுதலைபபுலிகளை எதிர்த்துப் போராடும் இவ்வேளையில், வடக்கு கிழக்குப் பகுதிகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை கண்காணிப்பதற்கு புதிய குழு ஒன்று நிறுவப்படுமென்று ஜனாதிபதி திருமதி சந்திரிகா அண்மையில் தம்மை சந்தித்த தமிழ்கட்சிகளின் உறுப்பினர்களுக்கு வாக்குறுதியளித்துள்ளார். இவ்வாறான ஒரு புதிய குழு நிறுவப்படுவது அவசியமற்றது என்று கூறினார்.

மனித உரிமை மீறல்களை கண்காணிப்பதற்காக, தற்போது இருக்கும் குழுவை முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா 1991-ம் ஆண்டு நிறுவியது குறிப்பிடத்தக்கது.

வி-ரி

### 5 போராளிகள்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

களாவர்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்ற எதிர்பாராத வெடி விபத்தில் லெப். ராமராஜன் (மகாலிங்கம் முகுந்தன் அம்பாறை) 2- ம் லெப். சிவாகரன் (சிவஞானம் பிரபாகரன் மட்டக்களப்பு) வீரவேங்கை ஈழமணி (தம்பிப்பிள்ளை ராஜேந்திரன் அம்பாறை) ஆகிய போராளிகள் வீரச்சாவு அடைந்தனர் இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

-ரி

### கிழக்கில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தினர் பின்னடித்து வருவதை அடுத்து ரோந்து நடவடிக்கைகள் குறைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

கேடுதல் மற்றும் சுற்றிவளைப்புகள், வழமைபோல இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை மட்டக்களப்பில் பொலிஸ் நிலையங்களிலிருந்து பொலிஸார் தப்பியோடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

-ரி

### ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி, அம்பனைப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவம் நேற்று முன் தினம் மாலை 5 மணிக்கு அளவெட்டி வயல், குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதலை மேற்கொண்டது.

குடியிருப்புப் பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறி இருந்தமையினால் அப்பகுதியில் மக்களுக்கு எந்தவிதமான ஆபத்துகளும் நிகழவில்லை.